இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 05.11.2026

# மீனவர்கள் எதிர்ப்பையும் மீறி...!

**1200** கோடி ரூபாய் மதிப்பில் புதிய தலைமைச் செயலகம் கட்டப் போகிறார் விஜய். அதற்காக அவர் தேர்ந்தெடுத்த இடம் கடல் பகுதி. அதிலும் குறிப்பாக மீனவர்கள் வாழ்விடப் பகுதி. இங்கு தலைமைச் செயலகம் அமைக்க வேண்டாம் என்று மீனவ மக்கள் ஒரு மாத காலமாக போராட்டம் நடத்தி வருகிறார்கள். அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் தலைமைச் செயலகம் கட்டுவதற்கான வேலைகளைத் தொடங்கிவிட்டது விஜய் அரசு. குறைந்தபட்சம் அந்த மீனவ சமுதாய மக்களை, அமைப்பினரை அழைத்துப் பேசினாரா விஜய்? இல்லை.

**சினிமாவில், 'இந்த உப்பு மண்ணை விட்டுப் போக மாட்டோம், போகச் சொன்னால் இங்கேயே செத்துப் போவோம்' என்று டயலாக் விட்டவர்தான் இந்த விஜய். இப்போது அவரே மீனவ மக்களின் வாழ்க்கையைச் சிதைக்கத் தொடங்கி விட்டார்.**

புதிய தலைமைச் செயலகம் கட்ட திட்டமிட்ட பகுதியில் உள்ள வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளை இடிக்க ஒப்பந்தப் புள்ளி கோரி இருக்கிறது விஜய் அரசு. தமிழ்நாடு வீட்டு வசதிவாரியத்தின் நந்தனம் கோட்டத்தின் சார்பில் மயிலாப்பூர் பகுதியில் உள்ள 96 குடியிருப்புகளை இடிக்க மின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பை விஜய் அரசு இரண்டு நாட்களுக்கு முன் விட்டுள்ளது. இதனை மீனவ சமுதாய மக்கள் கடுமையாக எதிர்த்துள்ளார்கள்.

**"எங்கள் மறுவாழ்வுக்காக கோரப்பட்ட இடத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்டுவதற்கான அரசாணையை ரத்து செய்யாமலும் கடற்கரை ஒழுங்கு முறை மண்டல அனுமதி பெறாமலும் இடிப்புக்கு ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. இதை மயிலாப்பூர் பகுதி பஞ்சாயத்துக்காரர்களாகிய நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்" என்று அறிக்கை வெளியிட்டுள்ளார்கள் மீனவ மக்கள்.**

எங்கள் மறுவாழ்வுக்காக நாங்கள் இதுவரை கேட்ட 3.82 ஏக்கர் இடம் இது தான் என்றும் மீனவ சங்கங்கள் சொல்லி இருக்கின்றன. கடற்கரை ஒழுங்கு முறை மண்டல அறிவிக்கை 2019 இன் கீழ் நீண்ட காலக் குடியிருப்புக்கான திட்டப் பகுதியாக இதை அறிவிக்க வேண்டும் என்பதுதான் அவர்களது கோரிக்கை. இந்த இடத்தை புதிய தலைமைச் செயலகம் கட்டுவதற்கு பயன்படுத்தக் கூடாது என்றும் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். புதிய தலைமைச் செயலகம் கட்டுவதற்கான அரசாணையை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்பதுதான் அவர்களது கோரிக்கை.

புதிய தலைமைச் செயலகம் கட்டுவதற்காக நேற்றைய தினம் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடத்தில் ஒரு ஆலோசனைக் கூட்டம் நடப்பதாகவும், அதில் கலந்து கொள்ள வேண்டும் என்றும் மீனவ கிராம பஞ்சாயத்தாருக்கு தகவல் அனுப்பப்பட்டது. இதில் கலந்து கொள்ள முடியாது என்று சில கிராம பஞ்சாயத்தார் அறிவித்தார்கள். இந்த நிலையில் அந்தக் கூட்டம் ரத்து செய்யப்பட்டது.

முறையான எழுத்துப்பூர்வமான அழைப்பாக இல்லாமல் தங்களுக்கு வேண்டிய சிலருக்கு மட்டும் தொலைபேசி மூலமாக பேசி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று மீனவ அமைப்பினர் சொல்கிறார்கள். மயிலாப்பூர், திருவல்லிக்கேணி பகுதியில் உள்ள அனைத்துப் பஞ்சாயத்தார்க்கும் முறையான எழுத்துப்பூர்வமான அழைப்பு வருங்காலத்தில் விடுக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

**விஜய் அரசு எத்தகைய பித்தலாட்டத்தைச் செய்து வருகிறது என்பது இதன் மூலம் தெரிகிறது. 'கடலைப் பார்த்து முதலமைச்சர் அறை இருக்க வேண்டும்' என்று ஜோசியர் சொன்னதற்காக ரூ.1200 கோடியில் தலைமைச் செயலகமும், சட்டமன்றக் கட்டடமும் அமைக்கிறார்கள் என்றால் 'தான்தான் காலமெல்லாம் ஆட்சியில் இருக்கப் போகிறோம்' என்று நம்புகிறாரா விஜய்? ஐந்து மாதத்தில் சந்தி சிரித்துக் கொண்டு இருக்கிறது இந்த ஆட்சி. இது எங்கே ஐந்தாண்டுகள் நீடிக்கப் போகிறது? ஊருக்குள் அடிக்கத் தொடங்கி இருக்கும் நாற்றம் இன்னுமா முதலமைச்சரின் மூக்குக்கு வரவில்லை? வந்து குமட்டவில்லை?**

**ரூ.6 கோடியில் தனக்கு அறை கட்டியதிலேயே எத்தனை முறைகேடுகள்? டெண்டரே விடாமல் பணிகளைத் தொடங்கியது நிறுவனம். அதன்பிறகு தான் டெண்டரே விட்டார்கள். ஒரே ஒரு அறை அமைக்கவே விதிமுறைகளைப் பின்பற்றாமல் முறைகேடுகள் செய்தது விஜய் அரசு. ரூ.1200 கோடியில் என்ன வெல்லாம் செய்வார்கள் என்பது இப்போதே தெரிகிறது.**

ஒரு இடத்தைத் தேர்வு செய்வதில் தான் எத்தனை குளறுபடிகள்? தலைமைச் செயலகம் கட்ட பட்டினப்பாக்கம் இடத்தை தேர்வு செய்து அரசாணையும் வெளியிட்டார்கள். அதற்கு எதிர்ப்பு வந்ததும், 'முதலமைச்சர் இன்னும் முடிவு செய்யவில்லை' என்று பல்டி அடித்தார்கள். முதலமைச்சர் முடிவெடுக்காமல் அரசாணை வெளியிட்டவர் யார்? முதலமைச்சரை விட அவர் பெரிய மனிதரா? அவர்தான் முதலமைச்சரை இயக்குகிறார?

முதலில் அரசாணை என்றால் என்ன என்றாவது தெரியுமா? அரசாணை போடுவதற்கு முன்னால் எதையெல்லாம் சிந்தித்து அரசாணை போட வேண்டும் என்பதாவது தெரியுமா?

தலைமைச் செயலகம் கட்டுவதற்காகத் தேர்வு செய்துள்ள பட்டினப்பாக்கம் என்பது மீனவர்கள் காலம் காலமாக வாழும் பூமி ஆகும். மொத்தம் 12 குடியிருப்புப் பகுதிகள் இரு மருங்கிலும் ஒரு கிலோ மீட்டருக்கு உள்ளாகவே உள்ளன. இங்கு வசிப்பவர்களில் பெரும்பாலானவர்கள் மீனவ மக்கள். இந்த முள்ளிக்குப்பம் பகுதியில் 20 லட்சம் சதுர அடி பரப்பளவில் புதிய சட்டமன்றம், தலைமைச் செயலகக் கட்டட வளாகம் அமைக்கப் போவதாக விஜய் அரசு திட்டமிட்டுள்ளது. இவ்வளவு பெரிய திட்டம் வரும் போது அங்குள்ள மக்களை முன்கூட்டியே சந்தித்து ஆலோசனைக் கூட்டம் நடத்தி அதன் அடிப்படையில் முடிவுகள் எடுத்து, அரசாணைகள் போட வேண்டும்.

'அரசாணை போட்டாச்சு, எல்லாரும் இடத்தைக் காலி பண்ணுங்கள்' என்பதுதான் மக்கள் நல அரசா?

மக்கள் எதிர்ப்பு ஒரு பக்கம் இருக்கட்டும். 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சுனாமியில் அதிகம் பாதிக்கப்பட்ட இடம் இது. இத்தகைய ஒரு கடற்கரைப் பகுதியை யாராவது தலைமைச் செயலகம் கட்டத் தேர்வு செய்வார்களா?

**'சுறா' படத்தில் ஒரு மாஃபியா வந்து மக்கள் வாழும் பகுதியைக் கபளீகரம் செய்யும். அத்தகைய மாஃபியாவாக இப்போது மாறி இருக்கிறார் விஜய். படத்தில் ஹீரோவாக நடித்தவர், அரசியலில் வில்லனாக வாழ்ந்து கொண்டிருக்கிறார். மாற்றம் என்றார்களே இதுதான் மாற்றம். விஜய் மூளையில் நடந்திருப்பதுதான் மாற்றம்.**



கோவை வருகை தந்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு விமான நிலையத்தில் கழகத்தினர் திரளாக திரண்டு வரவேற்ற காட்சி!

# MLAக்களை வாங்கத் தெரிந்த Dummy CMக்கு வெங்காயம் வாங்கத் தெரியாதா?

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி!

**சென்னை, நவ.5-**

**"MLAக்களை வாங்கத் தெரிந்த Dummy CM-க்கு வெங்காயம் வாங்கத் தெரியாதா?" என்று சட்ட மன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்.**

இதுகுறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

உரிக்க உரிக்க ஒன்றுமில்லாத வெங்காயம் தான் இந்த சோப்ளாங்கி அரசு என்பதற்கு, கூட்டுறவுத்துறை மூலம் இவர்கள் வெங்காயம் கொள்முதல் செய்த லட்சணமே சாட்சி.

ரேஷன் கடைகள் மூலம் பொதுமக்களுக்கு கொடுப்பதற்காக எந்த ஆய்வும் செய்யாமல் 450 டன் வெங்காயத்தை இந்திய தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்துதல் கூட்டமைப்பிடம் இருந்து வாங்கி இருக்கிறது இந்த மூடர் கூட்ட அரசு.

மகாராஷ்ட்ராவில் இருந்து ரயிலில் வந்திறங்கிய அந்த



வெங்காயம், அழுகிய நிலையில் தரமற்று இருக்கவே, அதை Coverup செய்ய, கொருக்குப் பேட்டை ரயில் முனையத்திலேயே இந்த ஆட்சியாளர்கள் விட்டுவிட்டார்கள்.

**Circus ஆட்சியைப் போல வெங்காயமும் நாற்றமெடுக்கிறது!**

இந்த Circus ஆட்சியை போலவே, நாளாக நாளாக வெங்காயமும் நாற்றமெடுக்க, "நாங்கள் வெங்காயம் வாங்க வில்லை கொருக்குப்பேட்டை ரயில் முனையத்தில் இருக்கும் வெங்காயத்திற்கும் அரசுக்கும் எந்த தொடர்பும் இல்லை" என்று அரசே Fake News Peddlerஆக மாறி Abusive Warriorsக்கு tough கொடுத்திருக்கிறது.

அதோடு நிற்காமல், வெங்காயத்தின் ஒரு பகுதியை திருச்சி காந்தி மார்க்கெட்டில் விற்க, லாரி ஏற்றியும் அனுப்பியுள்ளனர்.

**வெங்காய விலையேற்றமும் மக்கள் கண்ணீரும்!**

இந்த கோமாளிக் கூட்டத்தை நம்பி எதிலும் இறங்க முடியாது என்பதை அறிந்த திருச்சி வணிகர்கள், வெங்காயத்தை பார்க்காமல் வாங்க மாட்டோம் என்று மறுத்துவிட்டனர்.

இப்போது அழுகிய வெங்காய மூட்டைகளோடு என்ன செய்வது என்று புரியாமல் லாரி ஓட்டுநர் கதறிக் கொண்டிருக்கிறார். வெங்காய விலையேற்றத்தால் மக்கள் கண்ணீர் வடிக்கின்றனர்.

**இடைத்தேர்தலில் பிஸியாகிவிட்ட 24-ஆம் புலிகேசி!**

இதுபற்றி எந்த ஒரு கவலையும் இல்லாமல், இடைத்தேர்தல் வேலைகளில் பிஸியாகிவிட்டார் 24ஆம் புலிகேசி.

இந்த தரமற்ற வெங்காயத்தை கொள்முதல் செய்தவர் யார்? அதற்கு பின்பு அழுகிய வெங்காயத்தை மறைக்க புழுகுனி ஆட்டம் ஆடியவர்கள் யார்?

**வெங்காயம் வாங்கக்கூட துப்பற்ற வெட்கங்கெட்ட ஆட்சி!**

ஏற்கனவே ரேஷன் கடைகளில் 30 ரூபாக்கு பொன்னி அரிசி வழங்குவதாக சொல்லி விட்டு, tender விடாமல், வழக்கமான ரேஷன் அரிசியை Polish போட்டு விற்பது தொடர்பாக நான் எழுப்பிய கேள்விக்கு, காலம் வரட்டும் பதில் சொல்வேன் என்று ஓட்டமெடுத்தார்களே.. எப்போது தான் அந்தக்காலம் வரும்?

வெங்காயம் வாங்கக்கூட துப்பற்ற இந்த வெட்கங்கெட்ட ஆட்சியை நடத்தும் Dummy CM, இந்த கேள்விகளுக்கு என்ன பதில் வைத்திருக்கிறார்?

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கூறியுள்ளார்.

## தூத்துக்குடியில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதியில் மாணவன் காணாமல் மாயம்!

# விரைந்து செயல்பட்டு மாணவனைக் கண்டறிய வேண்டும்!

## கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. சமூக வலைதளப் பதிவில் வலியுறுத்தல்!

**சென்னை, நவ.5-**

**தூத்துக்குடியில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதியில் மாணவன் காணாமல் மாயம்! விரைந்து செயல்பட்டு மாணவனைக் கண்டறிய வேண்டும் என கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. சமூக வலைதளப் பதிவில் வலியுறுத்தியுள்ளார்.**

அப்பதிவு வருமாறு:-

தூத்துக்குடியில் அரசு ஆதிதி



ராவிடர் மாணவர் விடுதியில் தங்கிப் படித்து வந்த 8-ஆம் வகுப்பு மாணவன் காணாமல் போய் நான்கு நாட்களாகியும் மாணவனை இதுவரை காவல் துறை கண்டுபிடிக்காமல் இருப்பது அதிர்ச்சியளிக்கிறது.

த.வெ.க. ஆட்சியில் தமிழ் நாட்டில் சிறுவர்கள் காணாமல் போவது சர்வ சாதாரணமாகிக் கொண்டிருக்கிறது.

ஏற்கனவே செஞ்சி சிறுமி காணாமல் போய் 20 நாட்களுக்கு மேலாகியும் கண்டுப் பிடிக்காத காவல்துறை, தூத்துக்குடி மாணவன் காணாமல் போன விவகாரத்திலும் மெத்தனமாக செயல்படுவது கண்டிக்கத்தக்கது. இனியும் காலம் தாழ்த்தாமல் விரைந்து செயல் பட்டு மாணவனை கண்டறிய வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## சொத்துக்குவிப்பு வழக்கு:

# முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் விடுதலை!

## தூத்துக்குடி நீதிமன்றம் உத்தரவு!

*தூத்துக்குடி, நவ. 5-*

*சொத்து குவிப்பு வழக்கில் முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் எம். எல்.ஏ., மற்றும் அவரது குடும்பத்தினர் 7 பேரும் விடுதலை செய்யப் பட்டனர். தூத்துக்குடி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் அனிதா ராதாகிருஷ்ணன் எம். எல்.ஏ., கடந்த 2001 முதல் 2006 வரையிலான அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சராக பதவி வகித்தார்*

*அப்போது அவர்*



*தனது பெயரிலும், குடும்பத்தினர் பெயரிலும் வருமானத்தை மீறி 2 கோடியே 7 லட்சத்து 96 ஆயிரத்து 384 ரூபாய்க்கு சொத்து சேர்த்ததாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு போலீசார் வழக்குப் பதிவு செய்தனர். இந்த வழக்கில் அனிதா ராதாகிருஷ்ணன் (74), அவரது மனைவி ஜெயகாந்தி (66), சகோதரர்கள் சண்முகானந்தன் (58), சிவானந்தன் (61), மகன்கள் அனந்த பத்மநாபன் (47), அனந்த ராமகிருஷ்ணன் (45), அனந்த மகேஸ்வரன் (44) ஆகிய 7 பேரும் சேர்க்கப்பட்டு இருந்தனர்.*

*இந்த வழக்கு தூத்துக்குடி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வந்தது. இந்நிலையில் தூத்துக்குடி நீதிமன்றத் தில் சொத்துக் குவிப்பு வழக்கை மதுரையில் உள்ள சட்டவிரோத பணப்பரிமாற்ற தடைச் சட்ட வழக்கை விசாரிக்கும் நீதிமன்றத் துக்கு மாற்றும்படி கோரிய அமலாக்கத் துறையின் மனுவை தள்ளுபடி செய்து கடந்த ஆகஸ்ட் மாதம் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. மேலும் வழக்கை விரைந்து விசாரித்து முடிக்க உத்தர விட்டது.*

*இதைத் தொடர்ந்து 108 சாட்சிகளிடம் விசாரணை, குறுக்கு விசாரணை நிறைவடைந்த நிலையில், நேற்று முன்தினம் மாலை வழக்கு விசாரணைக்காக முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் மற்றும் அவரது குடும்பத்தினர்தூத்துக்குடி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் ஆஜராகினர்.*

*வழக்கை விசாரித்த நீதிபதி சுபாதேவி, குற்றச்சாட்டை லஞ்ச ஒழிப்புத்துறை மற்றும் அரசு தரப்பு நிரூபிக்காத தால் வழக்கில் இருந்து அனிதா ராதாகிருஷ்ணன் உள்பட 7 பேரையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தார். இதை வரவேற்று அவரது ஆதரவாளர்கள் பட்டாசு வெடித்து கொண்டாடினர்.*